நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை –5

ந.க.எண்.22993/2004/எம்1 நாள்: 8.6.2004.

சுற்றறிக்கை

பொருள்: உருவப்படங்கள் – உள்ளாட்சி அமைப்புகளின் மன்றக் கூடத்தில் வைக்கப்படும் உருவப்படங்கள் தொடர்பாக அரசாணைகள் வெளியிடப்பட்டது – விவரங்கள் – சுற்றறிக்கை– அனுப்பிவைக்கப்படுகிறது.

------

உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்களிலும் நகர்மன்றக் கூடங்களிலும் உருவப்படங்கள் வைப்பது தொடர்பாக இதுவரை அரசால் வெளியிடப்பட்ட அரசாணைகள் அவ்வப்போது நகராட்சிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இருப்பினும் நகராட்சி நகர்மன்றக் கூடங்களில் உருவப்படங்கள் வைப்பது தொடர்பாக நகர்மன்றங்கள் முடிவெடுப்பதற்கு உறுதுணையாக அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணைகள் விவரம் கீழக்கண்டவாறு தொகுத்து வெளியிடப்படுகிறது.

| வ. எண் | கட்டாயமாக வைக்க வேண்டிய திருவுருவப்படங்கள் (OBLIGATORY) | அனுமதி வழங்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள். |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் | அரசாணை (நிலை)எண். 1632, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.7.10.77. |
| 2. | மகாத்மா காந்தி | |
| 3. | அறிஞர் அண்ணா | |
| 4. | தற்போதைய இந்திய குடியரசுத்தலைவர் | |
| 5. | தந்தை பெரியார் | அரசாணை (நிலை) எண். 314, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.26.2.1979 |

| வ. எண் | அனுமதிக்க தக்க உருவப்படங்கள் (PERMISSIBLE) | அனுமதி வழங்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள். |
|---|---|---|
| 1. | பண்டிட் ஜவகர்லால் நேரு | அரசாணை (நிலை) எண்.1632, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.7.10.77. |
| 2. | சர்தார் வல்லபாய் பட்டேல் | |
| 3. | திரு.சி.ராஜகோபாலாச்சாரி. | |
| 4. | டாக்டர்.எஸ்.ராதாகிருஷ்ணன் | |
| 5. | திரு.கு.காமராஜ் | |
| 6. | அந்நந்த உள்ளாட்சி அமைப்புகளின் முந்தைய சிறப்பு வாய்ந்த நகர்மன்ற தலைவர் / மேயர்/ உறுப்பினர்கள் (அவர்கள் பதவியில் இல்லாத நிலையில்). | |

| | | |
|---|---|---|
| 7. | தற்போதைய பாரத பிரதமர் | அரசாணை (நிலை)எண். 976, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள். 26.7.1979 |
| 8. | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார். | அரசாணை (நிலை)எண். 273, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்.23.2.1981. |
| 9. | திரு.பு. முத்துராமலிங்கத்தேவர் | அரசாணை (நிலை)எண். 1330,ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.24.7.1981. |
| 10. | அமரர் காயிதே மில்லத் | அரசாணை (நிலை)எண். 526, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை. நாள்.25.4.1986 |
| 11. | மறைந்த பாரத பிரதமர் திருமதி. இந்திரா காந்தி | |
| 12. | முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் தற்போதைய முதலமைச்சர். | அரசாணை (நிலை)எண். 536, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.23.8.1989. |
| 13. | தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் குழுப்புகைப்படம் (Group Photo) | அரசாணை (நிலை)எண். 183, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.9.98. |

மேற்கண்ட உருவப்படங்கள் நகர்மன்ற கூடங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கட்டிடங்களில் வைப்பதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்

| வ. எண் | நிபந்தனைகள் | அரசாணை எண் மற்றும் நாள். |
|---|---|---|
| 1. | மேற்கண்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உருவப்படங்களை தவிர வேறு உருவப்படங்கள் அரசின் அனுமதியின்றி வைக்கப்படக்கூடாது. | அரசாணை (நிலை)எண். 1632, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்07.10.1977 |
| 2. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட உருவப்படங்கள் ( The Portraits authorised by Government) மட்டுமே நகர்மன்றக் கூடங்கள் மற்றும் கட்டிடங்களில் வைக்கப்பட வேண்டும் . | அரசாணை (நிலை)எண். 976, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள். 26.7.1979 |

| | | |
|---|---|---|
| 3. | அந்நந்த உள்ளாட்சி அமைப்புகளின் முந்தைய சிறப்பு வாய்ந்த நகர்மன்ற தலைவர்/மேயர்/உறுப்பினர்களின் (அவர்கள் பதவியில் இல்லாத நிலையில்)உருவப்படங்கள் மற்றும் பணியில் உள்ள தலைவர் /மேயர்/உறுப்பினர்களின் உருவப்படங்கள் வைக்க ஆகும் செலவினத்தை தனியார் ஏற்க வேண்டும்.<br>பிற இனங்களுக்குண்டான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து ஏற்கலாம். | அரசாணை (நிலை)எண். 1632,ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்07.10.1977 |

நகராட்சி/ மாநகராட்சிகளின் மன்றக் கூடங்கள் மற்றும் கட்டிடங்களில் உருவப்படங்கள் வைப்பது தொடர்பான நிகழ்வுகளில் மேற்கண்ட அரசாணைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாநகராட்சி/நகராட்சி ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/– ஹேமந் குமார் சின்ஹா
நகராட்சி நிர்வாக ஆணையர்.

<u>பெறுநர்</u>
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மண்டல இயக்குநர்கள்.
அனைத்து நகர்மன்ற தலைவர்கள்.
<u>நகல்:–</u>
1. அரசு செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை,
தலைமைச்செயலகம்,

சென்னை–9 (தகவலுக்காக).
2. இயக்குநர், நகரவியல் பயிற்சி நிலையம், கோயம்புத்தூர்.
3."எம்" பிரிவு கண்காணிப்பாளர்
4. எம் 1 /எம்2 /எம்3 உதவியாளர்கள்
5.இருப்புக்கோப்பிற்கு.
உதிரி–20.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//